# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 8,210 — 1936 ம் ௵ பங்குனி௴ 27 ந் திகதி, வெள்ளிக்கிழமை.

## Part IV.—நான்காம் பாகம்.

### காணிக் குத்தகை விற்பனவு.

முறிகண்டியில் கடைகட்டுவதற்குத் தகுதியான காணிகளின் குத்தகை விற்பனவு.

வட மாகாணம், முல்லைத்தீவு டிஸ்திறிக், வவுனியா வடக்கு, கருனவற்பற்று தெற்குப்பகுதி, தெருமுறிகண்டி அல்லது முறிகண்டி என்னும் கிராமத்திலுள்ள இதன்கீழ் விபரிக்கப்படும் காணித்துண்டுகளின் குத்தகையை, 1936 ம் ஆண்டு ஆனி௴ 24 ந் திகதி புதன்கிழமை காலமே 10·30 மணிக்கு மாங்குளம் வாடிவீட்டில், முல்லைத்தீவு டிஸ்திறிக் கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரை அவர்களால் ஏலத்தில்கூறி விற்கப்படும்.

2. குத்தகையின் நிபந்தனைகளில் சில பின்வருமாறு :—

(i.) குத்தகை 30 வருடகாலத்துக்கு நடைபெறும்.

(ii.) வருடாந்தம் கட்டவேண்டிய குத்தகைப்பணம் ஒவ்வொரு 10 வருடமும் புதுப்பிக்கப்படும்.

(iii.) குத்தகை வாங்கியவர் குத்தகைக்காணியை, குடியிருப்பதற்கும், கடைகட்டி வியாபாரஞ்செய்வதற்குமேயன்றி, வேறு சட்டப்பிரமாணத்துக்கு மாறுகிய, அல்லது ஒழுங்கற்ற வியாபாரத்திற்காகுதல், அல்லது பலர் கூட்டங்கூடிச் சந்தோஷங்கொண்டாடுவதற்காகுதல், அல்லது வெறெவ்வித காரணங்களுக்காகுதல் பாவிக்கலாகாது.

(iv.) குத்தகை வாங்கியவர், குத்தகைக்காணியின்பேரால் தனக்குரிய உரித்தை குத்தகை விற்றவரின் அனுமதியின்றி வேறு ஒருவருக்கு விற்க அல்லது சாட்டுதல் செய்யவும்படாது. மேலும் குத்தகைக்காணியின் எப்பகுதியையாகுதல் வேறொருவருக்கு வாடகைக்குக் கொடுக்கவும்படாது.

(v.) குத்தகை வாங்கியவர் குத்தகை உறுதியில் தனது கையொப்பமிட்ட திகதி துவக்கம் ஆறுமாதத்துக்குள் முல்லைத்தீவு கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரை அவர்களால் அங்கீகரிக்கப்பட்ட படத்தின்படியும், அவரால் அங்கீகரிக்கப்பட்ட கட்டடத்துக்கு வேண்டிய உபகரணங்களாலும் ஓர் கடைக்குத்தகுந்த கட்டடம் ஒன்று கட்டிமுடித்தல் வேண்டும்.

(vi.) குத்தகை வாங்கியவர் குத்தகை உறுதியில் தனது கையொப்பமிட்ட திகதி துவக்கம் மூன்று மாசத்துக்குள் முல்லைத்தீவு கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரை அவர்களின் திருப்திக்குத் தனது குத்தகை காணியின் எல்லை ஓரமாய் நல்ல வேலி அடைத்தல் வேண்டும் அல்லது ஓர் மதில்சுவர் கட்டல்வேண்டும்.

(vii.) குத்தகைப்பணம் 30 நாட்கள்கொண்ட காலத்துக்கு கட்டாமல் நிலுவையாயிருந்தால், காணியில் ஆட்சி எடுக்கவும், குத்தகையை அழிக்கவும் குத்தகை விற்றவருக்கு உரித்துண்டு. காணியில் செய்யப்பட்டிருக்கும் திருத்தங்களுக்கு எவ்விதமான நட்டமும் கொடுபடமாட்டாது.

(viii) குத்தகை முடிவில் குத்தகைக்காரான் குத்தகைக்காணியை குத்தகைக்காலத்துக்குள் கட்டப்பட்டிருக்கும் கட்டடங்களுடன் குத்தகைவிற்றவருக்குத் திருப்பிக்கொடுத்தல் வேண்டும். கட்டடங்களுக்காகவாவது திருத்தங்களுக்காகவாவது அல்லது வேறெவ்வித காரணங்களுக்காகவாவது நட்டம் கேட்பதற்கு குத்தகை வாங்கியவருக்கு எவ்விதமான உரித்துமிருக்கமாட்டாது.

3. இக்குத்தகையைப்பற்றிய வேறுவிபரங்கள் முல்லைத்தீவு கவண்மேந்து உதவி ஏசன்றுத்துரை அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

4. இக்காணிகளின் சரியான ஸ்தானங்களைப்பற்றிய விபரம் முல்லைத்தீவுக் கச்சேரியில் பெற்றுக்கொள்ளலாம் அல்லது கொழும்பு நில அளவைக் கந்தோர்த் தலைவருக்கு எழுதிகேட்டு அங்கே படங்கள் பார்த்துக்கொள்ளலாம்.

காணிக் கொம்மிஷனர் கந்தோர்,
கொழும்பு, 1936 ம் ௵ பங்குனி௴ 23 ந்

சீ. எல். விக்ரமசிங்க,
காணிக் கொம்மிஷனர்.

காணித்துண்டுகளின் விபரம்.

பிரதமபடம் இலக்கம் A332. கிராமம்—தெருமுறிகண்டி அல்லது முறிகண்டி. உரித்தாளி—முடி.

| துண்டு இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்பு குத்தகை விலை ரூ. ச. | வருஷாந்த வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாலையடிக்காணி அல்லது முறிகண்டியில்காடு | ஆர். இராமையா | வெறுந்தரை, ஒரு நிலைபரமற்ற கட்டடமுள்ளது | 0 0 19 | 0 43 | 15 |
| 2 | பாலையடிக்காணி | — | வெறுந்தரை, றேட்டோரத்துக்குச் சேமிக்க வேண்டியது | 0 0 4 | — | —* |
| 3 | முறிகண்டியில்காணி | — | ஷெ | 0 1 39 | — | —* |

117——J. N. 53875—137 (3/36)

T 1

| துண்டு இல. | காணியின் பெயர். | கேள்விக்காரனின் பெயர். | *விவரம். | விசாலம். ஏ. றூ. ப. | தரிப்பு குத்தகை விலை ரூ. ச. | வருஷாந்த வாடகை ரூ. |
|---|---|---|---|---|---|---|
| 4 | முறிகண்டியில்காடு | கே. கந்தையா | கீழ்காடும் வெறுந்தரையும | 0 1 13 | 2 85 | 30 |
| 5 | ஷை | ஷை | ஷை | 0 1 9 | 2 63 | 30 |
| 6 | ஷை | ஷை | ஷை | 0 1 10 | 2 68 | 30 |

*இக்காணிகள் றேட்டோரித்துக்குச் சேமிக்கப்படவேண்டியது (விற்பனவுக்கல்ல).

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச சட்டத்தினது 7ம் பிரிவின் பிரகாரம் பிரதமபடத்து இல. 300 ம், அம்பல கிராமத்திலிருக்கும் 35 ம் நம்பர் காணிக்கு பாதைக்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 299, ஆதர பிரதம 2. குறிச்சி—குடாகில்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 213 | போகாவத்த | தென்னமரத்தோட்டம், வயது 15-20 வருஷமுள்ள தென்னமரம் 6 | பெலியத்தையிலிருக்கும் ஜே. பபுநோனு | 0 0 10·3 |
| 214 | ஷை | ஷை | ஷை | 0 0 6·1 |

பிரதமபடத்து இல. 300, ஆதர பிரதம 1.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 308 | போகாவத்த | 12 வயதுள்ள தென்னமரம் ஒன்றும், 4 வயது உள்ள தென்னமரம் ஒன்றுமிருக்கும் தென்னந் தோட்டம் | பெலியத்தையிலிருக்கும் ஜே. பபுநோனு | 0 0 15·6 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதினுல் அக்காணிகளை ஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸு சித்திரை மாசம் 23 ந் தேதியிலன்று காலை 10 மணிக்கு தங்காலை தானுயத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்பாந்தோடைக் கச்சேரி,
1936 ம் ஸு பங்குனிமீ 24 ந் வ.

பீ. ஜே. ஹட்சன்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஸு-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் அமுகேன்கந்தை பாடசாலை கட்டுவதற்கு என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது :—

பிரதமபடத்து இல. 369. குறிச்சி—தலாப்பிற்றியபஹல.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. றூ. ப. |
|---|---|---|---|---|
| 46 | மினும்வத்தேகேன | தோட்டம் | பி. தர்மலேக குருவும் மறுபேரும் | 0 0 30·4 |
| 47 | ஷை | ஷை | ஷை | 0 2 38·4 |
| 48 | ஷை | கால்பாதை | ஷை | 0 0 5·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஸு-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணிகளைஆட்சிஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1936 ம் ஸு சித்திரை மாசம் 20 ந் தேதியிலன்று முற்பகல் 10 மணிக்கு அமுகேன்கந்தை பாடசாலையில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

இரத்தினபுரிக் கச்சேரி,
1936 ம் ஸு பங்குனிமீ 17 ந் வ.

என். ஜே. லடிங்ரன்,
சப்பிரகாம மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## உத்தியோக சம்பந்தமில்லாதவரின் அறிவித்தல்.

கொழும்பு டிஸ்திறிக், சீனுக்கோறளை, அதிகாரிபத்துவே தலவத்துகெலபிற்றியிலிருக்கும் அத்நாயகஅச்சிகே டொன் சுகத்தன் சீலவன்ச ஆகிய நான் இலங்கை அரசாட்சியில் 1907 ம் ஸு 1 ம் இலக்க இலங்கைச் சட்டத்தின் செடூல் 1 ம், 2 ம் பிரமாணத்தின்படி இன்று துவக்கம் 3 மாசத்துக்குப்பின் இரத்தினபுரி டிஸ்திறிக்கில் சிங்கள பாஷையில்பிரசித்த நொத்தாரிஸ்வாக வேலையார்க்கிறதற்கு றிஜிஸ்திறுர் ஜெனறல் அவர்களுக்கு மனுச்செய்வேன் என்று இத்தால் விளம்பரப்படுத்துகிறேன்.

இப்படிக்கு,
டி. எஸ். சீலவன்ச.

1936 ம் ஸு பங்குனிமீ 25 ந் வ.

PRINTED AT THE CEYLON GOVERNMENT PRESS, COLOMBO.